RECEIVED
1980-3-28
PERIODICALS
DIVISION
UNIVERSITY ... CAMPUS
LIBRARY

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 22 | பங்குனி 1 | ஜ-அவ் 10 | இதழ் 47
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 28-3-80

சுத்தத்திற்கும் சுவைக்கும்
புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு!
சைவ போசனகாரர்
மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில்
சந்தி)
288 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# ஈரானிய ஷாவின்

# உடல்நிலை கவலைக்கிடம்

## உயிரைக்காப்பாற்றடாக்டர்கள் முயற்சி

கெய்ரோ மார்ச் 27

ஈரானிய முன்னாள் மன்னர் ஷாவின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமானதாக உள்ளதாக அவருக்கு சிகிச்சையளித்துவரும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஷாவின் உயிரைக் காப்பாற்ற பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள் அவரது கல்லீரலை அகற்றுவதன் மூலமே காப்பாற்றமுடியும் என்று தெரிவித்தனர்

புற்றுநோய் காரணமாக 10 மடங்கு வீங்கியுள்ள அவரது கல்லீரலை அகற்றுவதற்கான சத்திரசிகிச்சைக்கு அவரது மனைவி அனுமதி வழங்கியுள்ளார்.

பலத்த பாதுகாப்புடன் கெய்ரோ வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் ஷாவை எகிப்திய அதிபர் அன்வர் சதாத் நேற்று பார்வையிட்டார்.

சத்திர சிகிச்சைக்காக அமெரிக்க வைத்தியர் மைக்கல் டிபேக்கி இங்கு வந்துள்ளார். (கு)

### மோட்டார்சைக்கிள்—லொறி

# பயங்கர விபத்து: இருவர் பலி!

(பளை)

எதிரெதிரே வந்துகொண்டிருந்த லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இரு இளைஞர்கள் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

இப்பயங்கரவிபத்து நேற்றுக்காலை 7-30 மணியளவில் பளை நீர்ப்பாசன இலாகாவிற்கு முன்னால் இடம் பெற்றுள்ளது.

ஓடு ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த லொறியும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு மோதிக்கொண்டன.

மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்த மல்லாகத்தைச் சேர்ந்த கனகரத்தினம் திருச்செல்வம் (வயது 22) இணுவிலைச் சேர்ந்த பொன்னுத்துரை பூபாலசிங்கம் (வயது 22) ஆகியோரே மரணமானவர்களாவர்.

யாழ். சட்டவைத்திய அதிகாரி திரு. திருவுடையான் பிரேதபரிசோதனை நடத்தினார். பளை திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எம். குமாரவேலு விசாரணை நடத்தினார்.

லொறிச்சாரதி திரு. பத்மநாதன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். [சங்-நி கொ]

## ரியூட்டரி மாணவி மரணம்
### இன்று விசாரணை

(புலோலி)

பொலிகண்டி ரியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரனின் மர்மமரணம் சம்பந்தமான விசாரணைகள் மீண்டும் இன்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இறந்தமாணவியின் உறுப்புக்கள் இரசாயன பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான அறிக்கை வராததாலும் கடந்த தவணையின் போது வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டன.

கந்தசாமி ராஜ்குமார் [ராஜன்] என்னும் சந்தேகநபரான இறந்தவரின் ஒன்றுவிட்ட சகோதரரும் அவரது நண்பரான பெர்னன்டோ ஆகியோர் இன்று மீண்டும் ஆஜர் செய்யப்படுவர் [ ]

## காப்புறுதி கூட்டுத்தாபன ஆரம்பவிழா

(கொழும்பு)

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை வைபவரீதியாக திறந்து வைக்கும் விழா இன்று காலை நடைபெறுகிறது.

கொழும்பு காலிவீதியில் அமைந்துள்ள இவ்வலுவலகத்தை வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி திறந்து வைப்பார். (கு)

## விபத்து பார்க்க சென்றவர் ஆஸ்பத்திரியில்

[யாழ்ப்பாணம்]

பளையில் நேற்றுக்காலை நடைபெற்ற விபத்தில் பலியான தமது உறவினரைப் பார்க்க நேரில் சென்ற வயோதிபர் ஒருவர் லொறி ஒன்றுடன் மோதுண்டு அபாயகரமான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மல்லாகத்தைச் சேர்ந்த ஆசாரி என்றழைக்கப்படும் இந்த நபர் பளையில் விபத்து நடைபெற்ற இடத்திற்கு காரில் நேரில் சென்று விட்டு மீண்டும் மல்லாகம் சென்று காரிலிருந்து இறங்கி நடந்து செல்கையிலேயே லொறியால் மோதுண்டார். (கொ-)

அரிய சந்தர்ப்பம்!
ஐரோப்பா மத்தியகிழக்கு
குளிரூட்டப்பட்ட பஸ்வண்டிமூலம் செல்ல விரும்புகிறீர்களா?
செல்லும் நாடுகள்:—
கிறீஸ், இத்தாலி, சுவிட்சலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், சுவீடன், ஈரான், ஈராக், குவைத்.
சில இடங்கள் மட்டுமே உண்டு.
(03-04-80க்கு) முன்னர் தொடர்புகொள்ளுங்கள்.
நொதேன் ரவல் ஏஜென்சி
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக)
4/1, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

மாபெரும் திறப்புவிழா

29-3-80 ம் திகதி முற்பகல்
11 மணி 15 நிமிடமளவில்
ஸ்ரீ கிருஷ்ணனந்
கொங்கிறீட் தொழிலகம்
தொல்புரம் ... சுளிபுரம்
(ரெருசோ - மாபிள், கொங்கிறீட் பொருட்கள் உற்பத்தியாளர்)
திரு. தா, திருநாவுக்கரசு (பா, உ.)
அவர்களால் திறந்துவைக்கப்படும்.
திறப்புவிழாவில் கலந்துகொள்ளுமாறு எமது அன்பர்கள், ஆதரவாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்
விற்பனை நிலையம்-
"மாபிள்ஸ்"
42, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7407
5301

அடையாள அட்டை;

# விண்ணப்பிக்காதவர்மீது சட்ட நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டைகளுக்கு இதுவரை விண்ணப்பிக்காத பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் அடுத்த மாதம் 7 ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கத் தவறுபவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மபாலன் மேற்கண்டவாறு நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இது தொடர்பாக திரு. தர்மபாலன் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது:-

"ஏப்ரல் 7 ம் திகதிக்குப் பின்னரும் விண்ணப்பிக்காதவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் ரூபா 500 க்கும் 1000 க்கும் இடைப்பட்ட அபராதம் விதிக்கப்படும்.

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் அண்மையில் நடாத்திய மதிப்பீடுகளின்படி, யாழ். மாவட்டத்தில் பெருந்தொகையானவர்கள் இதுவரை அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்யவில்லையென தெரிய வந்துள்ளது. 18 வயதுள்ள இதுவரை அடையாள அட்டையைப் பெறுதவர்கள், காலதாமதமின்றி, அவ்வப் பகுதி கிராமசேவகர்களிடம் சென்று விண்ணப்பங்களைப் பெற்று மனுச் செய்துகொள்ளலாம். 18 - 19 வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கு முத்திரைக் கட்டணம், ஒரு ரூபா

(8-ம் பக்கம் பார்க்க)

வெங்காய விதை
பம்பாய் வெங்காய செய்கையாளர்களுக்கு ஓர் வேண்டுதல். இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்திய அரசால் அத்தாட்சி பெற்ற
பூசா ரெட் ரக வெங்காய விதை
இன்னும் சில தினங்களுள் கிடைக்கும்.
உங்கள் தேவைக்கு முன்னதாகவே பதிவு செய்யுங்கள்.
பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்
(5299

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

30-3-80 ஞாயிற்றுக்கிழமை புளியம்பொக்கனை நாகதம்பிரான் கோவில் பொங்கலை முன்னிட்டு மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனையுடன் அன்பளிப்பும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 5323

### பயிற்சி

வெளிநாடுகளிலும், கப்பல்களிலும் தொழில்கள் பெறுவதற்குப் பயிற்சிகள் வெல்டிங் (Electric & Gas நவீன முறையில் 3 மாதம், வயறிங் (IEE முறைப்படி) 3 மாதம் P M G (Radio Officers Course) -6 மாதம், Building Construction & Draughtsmanship Transistor Techrology முதலிய பல பயிற்சிகள். எல்லா விபரங்களையும் தரும் இலவச கையேட்டிற்கு உடன் விண்ணப்பிக்கவும். தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம் (National Institute of Engineering Technology) 57, 59, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். 5305


## காப்புறுதிட்டத்தின் கீழ்
## வீடுகட்டவும் கடனுதவி

(பண்டத்தரிப்பு)

"காப்புறுதி திட்டங்களின் மூலம் மக்களுக்கு சேவையாற்றுவதுடன் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவமுடிகிறது. இப்பொழுது வீடுகட்டுவதற்குக் கூட காப்புறுதித்திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபாவரை கடன்பெற வசதிசெய்யப்பட்டுள்ளது".

இவ்வாறு, மாங்கொல்லை இளைஞர் முன்னேற்றமன்ற சனசமூக நிலையம் நடத்திய கிராம வளர்ச்சிக்கருத்தரங்கில் காப்புறுதிக் கூட்டுத்தாபன பிரசார உத்தியோகத்தர் திரு. க. பொன்னையா கூறினர்.

நிலையத் தலைவர் திரு. ச. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கடந்த 18 வருட சேவையில் குறிக்கோளின் 50 வீதம் நிறைவேறியுள்ளதாகவும், நாடுபூராவும் 30 கிளைகள் இயங்கிவருவதாகவும் கூறினர்.

முதியோர் கல்வியதிகாரி திரு. சி. எஸ். சுப்பிரமணியம் பேசுகையில், "மேலை நாடுகளில் முதியோர் வாழ்வு சுபீட்சமடைவதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் அடிப்படையிலேயே இங்கும் நாம் முதியோர் கல்வியை அறிமுகப்படுத்திவருகிறோம் முதியோர் வீணைகாலத்தைக் கடத்தி நாட்டுக்குப் பாரமாக இராமல் நாட்டின் அபிவிருத்திக்கு உதவ இத்திட்டங்கள் வழி வகுக்கக் கூடியவை" என்று கூறினர்.

'யாழ்ப்பாணமக்கள்

# கமத்தொழில் கைத்தொழிலை பெருக்கவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"கடின உழைப்பும், விவேகமும் மிக்க யாழ்ப்பாணத்து மக்கள் நல்ல பல திட்டங்களை வகுத்து கமத்தொழில், கைத்தொழில் ஆகியவற்றில் முதலீடுகளைச் செய்து உற்பத்தியைப் பெருக்க முன்வரவேண்டும்"

இவ்வாறு, காரைநகர் வேதரடைப்புக் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டிடத்தில் நடந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய வடபிராந்திய திட்டமிடல் பிரதி அதிபர் திரு. எஸ். சிவதாசன் குறிப்பிட்டார். இக்கருத்தரங்குக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் வே. இராமகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

திரு. சிவதாசன் மேலும் குறிப்பிட்டதாவது: "சென்ற ஏழு ஆண்டுகாலமாக அமுலிலுள்ள பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் உற்பத்தித்துறைக்கு ஒதுக்கப்பட்டது மிகமிகக் குறைவானதேயாகும். இத்துறைக்குச் செலவிடும் நிதி மக்களுக்கும் மாவட்டத்திற்கும் பயனுள்ளதாக அமைகின்ற அதே வேளையில் தேசிய ரீதியிலும் பயனளிக்கக் கூடிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த அடிப்படையில் பல திட்டங்களை வகுத்து அமுல்படுத்தப்படும்.

"மாட்டுப்பண்ணை வைத்து நடத்துவோரில் பலர் பாலினை விற்பனை செய்ய முடியாதுள்ளனர். இப்பால் விற்பனை வசதியை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன் திருநெல்வேலியில் பால் சேகரிக்கும் நிலையம் அமைக்கப்படவுள்ளது. யாழ். குடாநாட்டின் எப்பகுதியிலிருந்தும் இந்நிலையத்தில் பாலினை விற்பனை செய்ய முடியும். இதன் வாயிலாக மாட்டுப்பண்ணைத் திட்டம் மேலும் ஊக்குவிக்கப்படுகிறது. இலங்கையிலுள்ள மாடுகளில் மூன்றில் ஒரு பகுதி மாடுகள் யாழ்ப்பாணத்திலேயே இருக்கின்றன. இம்மாடுகளைச் செயற்கைப் பதித்தும் சினை மூலமாகக் கூடிய பலனை அடையலாம். செயற்கைப் பதித்தும் சினை மூலமாக யாழ்ப்பாணத்திலுள்ள மாடுகளில் நான்கில் ஒரு பகுதி நல்ல பலனை அளிக்கக்கூடிய முறையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன இது யாழ்ப்பாண மக்களின் பெரிய சாதனையாகும் என வெளிநாட்டு நிபுணர்கள் பலரும் பாராட்டிச் சென்றுள்ளனர்.

"கோழிப்பண்ணைத் திட்டத்தை ஊக்குவிக்கும் ஓர் அம்சமாக கோழி வளர்க்கும் மாதிரிநிலையம் ஒன்று ஐந்து லட்சம் ரூபா செலவில் அச்சுவேலியில் அமைக்கப்படவுள்ளது. இந்நிலையத்தில் இருந்து தேவையானளவு நல்லரகக் கோழிக் குஞ்சுகளை அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து பெறக்கூடியதாகவிருக்கும்"

டாக்டர் வே. இராமகிருஷ்ணன் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: "இன்று எமது கல்வி வெறும் ஏற்றுமதிக் கல்வியாகவே அமைகின்றது. எமது நாட்டு இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாடு செல்வதால் அவர்களது ஆற்றலும், விவேகமும் அந்நியநாடுகளுக்கே பயன்படுகின்ற அதே வேளையில் எமது நாடு பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பணம் உழைக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு சுயமாகவே தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் அவர்கள் தமதுசொந்த வாழ்வை மேம்படுத்துவதோடல்லாமல் நாட்டிற்கும், சமூகத்திற்கும் சேவை பாற்றியவர்களாவார்கள்" (ஈ)

## கும்பாபிஷேகமும் கதாப்பிரசங்கமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கையில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் வேம்படி, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் அடுத்தமாதம் 3ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது.

'பிரதிஷ்டா சிரோன்மணி' பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் பிரதமக் குருக்களாகக் கடமையாற்றுவார்.

மகாகும்பாபிஷேகதினத்தையடுத்துப் பத்துத்தினங்கள் தினமும் விசேட அபிஷேகமும், ஆராதனையும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இப்பத்துத் தினங்களிலும் பிரமஸ்ரீ நித்தியானந்த சர்மாவின் கம்பராமாயண இன்னிசை விரிவுரை நிகழும்.


### தவறிவிட்டது

சென்ற வெள்ளிக்கிழமை இரவு யாழ் — பருத்தித்துறை பஸ்ஸில் திறப்புக்கள் அடங்கிய 'பாக்' தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் சு. கனகசபாபதியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். 5315


# இன்றைய பலன்

பங்குனி மாதம் 15-ம்திகதி (28-3-80) வெள்ளிக்கிழமை

மேடம்: பெரியோரைப் பேணுவதன்மூலம் பெரிய காரியங்களைச் சாதிப்பீர்கள். பெற்றோர் ஆதரவுண்டு. குடும்பத்திலும் பாக்கியவிருத்தியுண்டு.

இடபம்: மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும் தித்திக்கும் செய்தியுமுண்டு. தேனூன வாழ்வுமுண்டு

மிதுனம்: பொதுசனத் தலைமை கிடைக்கும். பொதுப் பணிகளிலும் ஆர்வம் பிறக்கும். லாபகரமான தொழிலிலும் ஈடுபடுவீர்கள்.

கடகம்: உத்தியோகத்தில் விழிப்புணர்ச்சி நன்று. குடும்பக்கவலையுடன் குறுக்குவழித் தலையீடு புதிர்போடும் வாழ்விலும் சோர்வு தோன்றும்

சிங்கம்: கருடப்பார்வை வட்டமிடும். ஏமாற்றம் தரும் செய்திக்குமிடமுண்டு. வேண்டாத உறவுகளை துண்டித்தல் நன்று.

கன்னி: கன்னல் மொழிபேசி காரியத்தைச் சாதிப்பீர்கள். வெளியூராப் பயணமும்ஏற்படலாம். குடும்ப வாழ்விலும் நலன் உண்டு.

துலாம்: எதிலும் அவசரக்கோலம தென்படும். சிறிய பூசலும் தோன்றி மறையும். உற்சாகமற்ற தினம்.

விருச்சிகம்: புதிய முதலீடுகள் வெற்றியைத் தரும். பொருளாதாரத் துறையில் விருத்தியுண்டு. மாதுருவழியாலும் மகிழ்ச்சியுண்டு.

தனுசு: வாழ்விலும் அமைதியுண்டு. வாகன நலனும் உண்டு. தானிய விருத்தியுண்டு. தனச்சிறப்புமுண்டு.

மகரம்: அவசரப போக்கைத் தவிர்க்கவும். தவறான பாதையில் இழுத்துச்செல்ல எதிரிகள் முனைவர். மனத்திடம் வேண்டும்.

கும்பம்: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும். கண்ணியமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவீர்கள்.

மீனம்: உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும். குடும்பக் கவலையும் தலை தூக்கும். உஷாராக இருக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

## தவக்கால நற்சிந்தனை



### வீரப்பெண்

இயேசுவின் சிலுவைப் பாதையில் மரணப்பாடுகளில் அவர் பலரைச் சந்திக்கின்றார். சிலர் அவருக்கு ஆறுதலாகவும், பலர் அவருக்குபலத்த வேதனைகளையும் துன்பங்களையும் கொடுப்பவர்களாகவும் விளங்கினர். இவர்களுள் பெண்கள் பலர் தங்கள் பெண்மையின் சிறப்புப் பண்புகளுக்கேற்ப இயேசு மீது பரிவும் நேசத்தையும் காட்டினார்கள். அவர்களுள் இனந்தெரியாத ஒருத்தி (பாரம்பரியம் வெரோனிக்காள் என்று அழைக்க) கண்ணீரையும் செந்நீரையும் சிந்தும் யேசுவைப் பார்த்துச் சிரித்தும், இரக்கமற்ற முறையில் அவரை நடத்தியபோதிலும், அவள் துணிந்து அப்போர்வீரர்கள் நடுவே புகுந்து இயேசுவின் முகத்தைத் துடைக்கிருள்

இரக்கமுள்ள எத்தனையோ மனித இதயங்கள் வியப்படைந்து நின்ற வேளையிலும், இவ்வாறு துணிச்சலும், ஆறுதல் அளிக்க அவள் புரிந்த செயலும், இன்றும் நமக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது இவ் அன்புச் செயலுக்கு தன் உள்ளத்தில் இறைவனின் சாயல் பதிக்கப்படுவதை உணர்கிருள்.

வீதியிலோ, சேரியிலோ, அல்லது மருத்துவ மனையிலோ கேட்பாரற்று போர்வை நனைந்த துர்நாற்றமெடுக்கும் மனிதனுக்கு ஆறுதல் புரிய துணிவாயா? துணிந்தால் இறைவனின் சாயல் உன்னிலும் பொறிக்கப்படும்.

- வண. மேரி பஸ்ரியன் அடிகள்

## திருமலையில் உல்லாசப் பயணியிடம் கொள்ளை

(திருமலை)

திருகோணமலையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த உல்லாசப் பயணி ஒருவரிடமிருந்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கமரா, கைக்கடிகாரம், ஆகியவற்றுடன் 1000 அமெரிக்க டாலரும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி திருமலைப்பொலிசார் புலன் விசாரணைசெய்து வருகின்றனர்.

## விண்ணப்பங்கள் மீளாய்வு

(புலோலி)

வடமராட்சி வடக்கு, கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவு முத்திரை விநியோக மீளாய்வு விண்ணப்பங்கள் தொடர்பான விசாரணைகள் கடந்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இப்பிவிரில் பலர் தமக்கு உணவுமுத்திரை வழங்கப்படாததைச் சுட்டிக் காட்டித் தமது விண்ணப்பங்களை மீளாய்வு செய்து உணவு முத்திரை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபரைக் கோரியிருந்தனர்.

இதனையடுத்து இவ்விண்ணப்பங்கள் தொடர்பான விசாரணையை பொதுசனத்தொடர்புகள் அதிகாரி திரு. எஸ். சண்முகசுந்தரம் மேற்கொண்டார். (அ


நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்! சிறந்த சேவை!! உங்கள் திருப்தியே எமது நோக்கம்!!!

✯ சகலவிதமான றேடியோக்கள், கசற் றெக்கோடர்கள்,
✯ மின்சார உபகரணங்கள் ✯ தொலைக்காட்சிப் பெட்டிகள் (ரி.வி.)

பழுதடைந்துவிட்டனவா! உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

குறுகிய காலத்தில், உங்கள் சாதனங்களை திருத்தியமைத்து சேவை வழங்குவோம். மற்றும், றேடியோக்கள் ரிவி அன்ரனு ஏரியல்கள், உதிரிப்பாகங்கள் விற்பனையாகின்றன.

டில்கா றேடியோ அன் ரிவி ரெக்னிசன்ஸ்

202 B ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

DILKA RADIO & T.V. TECHNICIANS. JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இளைஞர் சமுதாய எதிர்காலம் இருள் சூழ்ந்து இருக்கிறது"

## கல்வித்திட்டப் பொருட்காட்சியில் எம். பி. கவலை

(பண்டத்தரிப்பு)

"எமது வருங்கால இளைஞர் சமுதாயத்தின் எதிர்காலம் மிகவும் இருள் சூழ்ந்ததாக இருக்கிறது. மாணவர்கள் இதனை நன்குணர்ந்து தமது கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்து இருள் சூழ்ந்த எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கிக் கொள்ளவேண்டும். செயல் திட்ட விஞ்ஞான ரீதியிலான கல்வியைப் பெறுவதின் மூலம் எமது மாணவர்கள் பெரும் பயனடையலாம்".

இவ்வாறு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் நடைபெற்ற ஒன்றிணைந்த கல்வித் திட்டப் பொருட்காட்சியை திறந்து வைத்து உரையாற்றுகையில் மானிப்பாய் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

மானிப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. தர்மலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது -

"எமதுமாணவர்களை இன்று எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை கல்விகற்றபின்பு எவ்வாறு வேலை வாய்ப்புகளை பெறுவது என்பதாகும். கல்லூரிகளில் படிக்கும் காலத்திலேயே மாணவர்கள் தமது திறமைகளையும், ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்வதற்கு இத்தகையசெயல்திட்டப்பொருட் காட்சிகளும், கண்காட்சிகளும் நல்ல சாதனங்களாகத் திகழ்கின்றன.

மாணவர்கள் மத்தியில் ஆக்கத்துறை வளர்ச்சிக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் இது போன்ற பொருட்காட்சிகள் உதவிசெய்கின்றன" என்றார்.

மாணவர்கள் ஆக்கிய காட்சிப் பொருள்களை பெருந்தொகையான பெற்றோர்களும், பொதுமக்களும் பார்வையிட்டனர்.

---

மணிவாக்கு

கனவில்லாத, தூய்மையான ஆழ்ந்த நித்திரையே சமாதியும் தியான யோகமும், கர்மயோகமுமாகும்.

—மகாத்மாகாந்தி

---

**மக்கள் கருத்து**

### நாற்றம் வீசும் முலவைச் சந்தி

யாழ். மாநகர சபையின் 14ம் வட்டாரத்தின் முக்கிய சந்திகளில் ஒன்றாகத்திகழும் முலவைச் சந்தியில் பல மாதங்களாக முடைநாற்றம் வீசிக் கொண்டிருந்தும் யாழ் மாநகர சுகாதாரப் பகுதியினர் எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. புகையிரதக் கடவைக்கருகில் குளம் போன்று கழிவுநீர்த் தேக்கம் ஒன்று காணப்படுவதே இத் துர்நாற்றத்திற்குக் காரணம்.

காரணத்தை சில மாநகர சபை உறுப்பினர்கள் நேரடியாகப் பார்வையிட்டும்கூட, எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இக்கழிவுநீர்த் தேக்கத்தால் தொற்றுநோய்கள்பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருகிறது எனவே யாழ். மாநகர சபை இவ்விடயத்தில் உடன் கவனம் செலுத்துமென நம்புகிறோம்.

கரன்

யாழ்ப்பாணம்

---

### உணவு முத்திரை விசாரணை

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய், உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவு முத்திரைகளை வழங்குவதற்கான விசாரணைகள் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்றன

சுமார் நானூறுக்கு அதிக மாணவர்களின் மேன் முறையீடுகள் இந்த விசாரணையின் போது ஆராயப்பட்டன. முன்னாள் யாழ் திட்டமிடல் அபிவிருத்தி பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். லோகேஸ்வரன் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகம் ஆகியோர் இவ் விசாரணைகளை நடாத்தினார்கள்.

---

யாழ். மாவட்டம்

# பால் விநியோகத்தைசீராக்க

## மாவட்ட அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பால் விநியோகத்தை சீராக நடாத்துவதற்கு யாழ். மாவட்ட அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின்படி யாழ். வைமன் வீதியிலுள்ள பாற்பண்ணை நிர்வாகத்தை நடாத்துவதற்கு தகுதிகாண் நிலை, நிர்வாகக் குழுவொன்று தெரிவாகியுள்ளது.

இக்குழுவுக்கு தலைவராக மிருக வைத்திய நிபுணர், வைத்தியகலாநிதி எஸ். கணேஸ்வரனும், உறுப்பினர்களாக திரு. கனகரத்தினம், திரு. எஸ். பொன்னுத்துரை, திட்டமிடல் உத்தியோகத்தர் திரு கே. புவனேந்திரன், மாவட்ட உத்தியோகத்தர் திரு. பாலேந்திரன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

திருநெல்வேலி பால்சேகரிப்பு நிலைய வேலைகள் மூன்று மாதத்தில் பூர்த்தியானதும், வைமன் வீதியிலுள்ள பாற்பண்ணை திருநெல்வேலி பால் சேகரிப்பு நிலையத்திற்கு மாற்றப்படும். தற்போது கிளிநொச்சி பால்சேகரிப்பு நிலையத்தில் சேகரிக்கப்படும் பால் சேமித்துவைக்கப்படுகிறது திருநெல்வேலி பால் சேகரிப்பு நிலையம் தனதுவேலைகள் ஆரம்பித்ததும், கிளிநொச்சியில் சேமித்துவைக்கப்படும் பால் முழுவதையும், திருநெல்வேலி பால் சேகரிப்பு நிலையம் பாவனையாளர்களுக்கு விநியோகம் செய்யும்.

திருநெல்வேலி பால்சேகரிப்பு நிலையத்திற்கு அரசினால் வழங்கப்படும் 40 கறவைப்பசுக்களுடன் யாழ். வைமன் வீதியிலுள்ள 35 கறவைப்பசுக்களுமாக 75 கறவைப்பசுக்கள் திருநெல்வேலி பால்சேகரிப்பு நிலையத்தில் வளர்க்கப்படும், வருடத்தில் திருநெல்வேலி பாற்பண்ணைக்கு அண்மையிலுள்ள வறிய மக்களுக்கு வருடாவருடம் 15 கறவைப்பசுக்களை மாவட்ட அமைச்சு இலவசமாக வழங்கும். இதன் மூலம் தனியாரும். பால் உற்பத்தியில் கவனம்செலுத்த வாய்ப்பிருக்கும்.

இப்புதிய திட்டத்தின்படி திருநெல்வேலி பால்சேகரிப்பு நிலையத்திலுல் 16,000 பைந்பாலை பாவனையாளர்களுக்கு தினமும் வழங்கமுடியுமென்று மாவட்ட அமைச்சு எதிர்பார்க்கிறது,

தற்போது வைமன் வீதியிலுள்ள பாற்பண்ணை மாமொன்றுக் 30,000 ரூபாவை லாபமாகப் பெறுகின்றது.

(செ)

---

இன்று குருபூசை

# கந்தனடி போற்றும்

## கதிரைவேல் நாவலர்

பண்டுதொட்டுப் பலவளமும் பெரும்புகழும் படைத்த ஈழமணித்திருநாட்டின் கிரீடம் போன்றது யாழ்ப்பாணம். இந்த யாழ்ப்பாணத்தில் அறிஞர்கள் பலர் அவ்வப்போது தோன்றி அறிவுச்சுடர் கொளுத்தி அதர்மத்தையும், அந்நியமத ஆதிக்கத்தையும் வென்று சைவத்தையும் தமிழையும் வளர்த்து நிலைநாட்டியுள்ளனர். அந்நிய மதக்கொடுமைக் காற்றாது தாய் நாட்டுக்குத் தப்பியோடி நல்லறிஞராய்த் திகழ்ந்து விளங்கியவர் ஞானப்பிரகாசமுனிவர். அவர் பரம்பரையில் உதித்த ஆறுமுக நாவலர், சைவத்திற்கும், தமிழுக்கும்செய்த தொண்டு அளப்பரியது. அவரது மாணவ பரம்பரையில் தோன்றி அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றித் தொண்டாற்றியவருள் சதாவதானம் கதிரைவேற்பிள்ளை நாவலரும் ஒருவர்.

31-03-1895 முடியவுள்ள சிறிது காலம் தாம் கல்விகற்ற மேலைப் புலோலிச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகவும் கடமையாற்றிவிட்டு அறிவைத்தேடும் அவா மிகுதியால் தாய்நாட்டித்துச்சென்று திரு. த. கனகசுந்தரம்பிள்ளை முதலான பல அறிஞரிடமும் இலக்கண இலக்கியங்களையும் வடமொழியையும் கற்றுப் பாண்டித்தியம்பெற்றார்.

பிரசங்கமாரி பொழிதல், நூல்களை எழுதி வெளியிடல், மாணவருக்குக் கற்பித்தல் என்பன இவரின் சாதாரண பணிகள். திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், உலகநாத முதலியார், ஜெ. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை முதலியோர் இவரின் குறிப்பிடத்தக்க உத்தம மாணவருட்சிலர். திரு. வி. க. வைத் தமிழ்த் தென்றலாக்கியவர் பிள்ளையவர்களேயாம். தமிழ் நாட்டிலிருந்து இடையிடையே தமது மேலைப்புலோலிக்குவந்து

### சைவப்புலவர் சி. அருளம்பலம்

(காப்பாளர், சதாவதானிகதிரைவேற்பிள்ளை ச. ச. நிலையம்)

இப்பெரியார் மேலைப்புலோலியில் அன்பும் பண்பும் அறிவும், சைவாசாரமும் நிறைந்த நாகப்பிள்ளையின் அருந்தவப் புதல்வராய் பிரசோற்பத்தி வருடம் மார்கழி மாதம் மூன்றாந் திகதி (18-12-1871) வியாழக்கிழமை பிறந்தார்.

உரிய பருவத்தில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற இவர் ஆறுமுகநாவலரின் ஆசீர்வாதம் பெற்ற மேலைப்புலோலிச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி பயின்றார்..

ஆரம்பக் கல்வி முடிந்தபின் நொத்தாரிசுவின் இலிகிதராகவும், பிறப்பு இறப்புப் பதிவாளராகவும் கடமையாற்றியதுமன்றி 1-12-1894 முதல் பிரசங்கமாரி பொழிந்தது மன்றி மகாவேலன் தணி முருகையன் ஆலயத்தில் அட்டாவதானமும் புலோலிப் பசுபதீசுவரன் கோயிலில் தசாவதானம், சோடசாவதானமும் செய்துகாட்டிப்பலரின்பாராட்டைப்பெற்றார். பின் சென்னை சென்று இலக்குமி விலாச மண்டபத்தில் பல பேரறிஞர் முன்னிலையில் சதாவதானமும் செய்துகாட்டிப் பெரும்புகழீட்டினார்.

இத்தகைய சாதுரியராய இவர் சதாவதானம் செய்து சில நாட்களின் பின் குன்றூரில் இருக்கும்போது குளிர் சுரத்தால் பீடிக்கப்பட்டு 1907ம் ஆண்டு பங்குனி மாதம் மக நட்சத்திரம்கூடிய துவாதசித் திதியில் இறைவனடி சேர்ந்தார். திரு. வி. க. நிழல் போல இவரைத் தொடர்ந்து இவருக்குப் பணிபுரிந்தார் தமதுகுருபக்தியை இறுதிவரை காட்டிய திரு. வி. க. இவரின் பிரிவாற்றாது பாடிய பாடல்களுள் இரண்டைக் குறிப்பிடவாம்.

மெய்யருட்பா வெங்கே
மெய்கண்ட நூலெங்கே
தெய்வீக நீறெங்கே செத்
தமிழின்-மெய்யெங்கே
கந்தனடி போற்றுங் கதிரை
வேல் நாவல நீ
இந்த நிலந் தோன்றாயே
லிங்கு.

(அ)

---

சோவியத்தை எதிர்த்து

### பேருவளையில் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆப்கானிஸ் தான்மீது சோவியத்யூனியன் ஆக்கிரமிப்புச்செய்துள்ளதைக் கண்டித்தும், சுதந்திரத்துக்காகப் போராடும் ஆப்கானிஸ்தான் மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் பொதுக் கூட்டம் ஒன்றுநாளை சனிக்கிழமைமாலைவேருவளைநகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு ஒத்துழைப்பு நல்கும் பேருவளை கமிட்டியால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கூட்டத்திற்கு ஜனாப் ஹுசைன் சாலி தலைமைதாங்குவார். திருவாளர்கள் ஜி. ஐ. டி. தர்மசேகரா, வி. ஏ. கந்தசாமி, காமினியாப்பா, றெஜினல் கூரே ஆகியோர்இக்கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்கள். (கு)

---

வடமராட்சிப்பகுதியில்

# தொலைபேசித்தொடர்பு சீரடைகிறது

(உடுப்பிட்டி)

"வடமராட்சிப் பகுதியில் உள்ள தன்னியக்கத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலயங்களில் வானொலித் தொடர்புத் தொலைபேசிச் சாதனங்கள் புகுத்தப்பட்டு நவீன மயமாக்குவதற்கு முதற்படியாக கரவெட்டித் தன்னியக்கத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலயம், வானொலித் தொடர்பு தொலைபேசிப் பரிவர்த்தனை நிலயமாக்கப்பட்டுள்ளது"

இவ்வாறு யாழ். மாவட்ட தொலைபேசித் தொடர்பு பிரதம பொறியியலாளர் திரு. செ. தெய்வசிகாமணி நெல்லியடி மத்தியசந்தையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வானொலித் தொலைபேசித் தொடர்பு பரிவர்த்தனை நிலயத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்,

இவ்வைபவத்திற்கு திரு. ரீ. இராசரத்தினம் தலைமை வகித்தார்.

திரு. தெய்வசிகாமணி மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

"வடமராட்சியிலிருந்து பல மைல் தூரத்திலுள்ள யாழ்ப்பாணத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள இதுவரையும் பல மணிநேரம் தாமதம் ஏற்பட்டு வந்தது. இங்கு புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் தொடர்பு சாதனம் மூலம் உடனுக்குடன், யாழ்ப்பாணத்துடன் தொடர்புகொள்ள முடியும். தீவுப்பகுதி, சாவகச்சேரி, கிளிநொச்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கு இத்தகைய வானொலித் தொடர்புத் தொலைபேசி இணைப்பு தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. "அல்வாய் மாலி சந்தியிலும் வெகு விரைவில் தொலைபேசித் தொடர்புப் பரிவர்த்தனை நிலயம் ஒன்று நிறுவப்படவுள்ளது" என்றார்.

நெல்லியடிப் பட்டினசபைச் செயலாளர் திரு. வ. இராமச்சந்திரன் பேசுகையில்,

"தொகுதிகளின் அபிவிருத்தி வேலைகளுக்கென அரசாங்கம் பல லட்ச ரூபா பணத்தைச் செலவிட்டு வரு

(7-ம் பக்கம் பார்க்க)

---

### சுகாதார திணைக்கள புதிய ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் பொது சுகாதார தாதிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை சுகாதாரப் பகுதியினரால் இலவசமாக வழங்கப்பட்டு வரும் குடைகளை, இவ்வாண்டு தொடக்கம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கொழும்பிலுள்ள சுகாதார சேவை பணிப்பாளர், நாட்டிலுள்ள சகல சுகாதார நிலயங்களுக்கும் கடந்த வாரம் புதிய சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாண்பு மிகு
வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் செய்தி

இன்று அங்குரார்ப்பணம் செய்யப்படும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் புதிய அனுபவங்களைப் பெறும் நோக்கில் இலங்கையில் காப்புறுதித் துறையின் ஒரு புது யுகத்தில் அடியெடுத்து வைக்கிறது. காப்புறுதித் தொழில் ஏக போக உரிமையை நீக்கி இணைச் சேவை அமைப்புகளின்

பணிப்பாளர்களும் ஊழியர்களும், காப்புறுதியின் அதிக பட்ச பயன்களை ஆகக் கூடிய திறமையுடன் வழங்கும் நோக்கம் கொண்டு, தங்கள் வாடிக்கையாளர்களுக்கு நேரடியான தனித்துவச் சேவை புரிய உறுதி பூண்டிருக்கிறார்கள். இந்த நோக்கத்தை நிறைவேற்ற, கூட்டுத் தாபனத்தின் எல்லா மட்டங்களிலும் பணி புரிய, மக்கள் சேவைக்கே தங்களை அர்ப்பணித்து, தனித்துவமான திறமைக் காட்ட வல்ல, கடமை உணர்ச்சியும் தொழிற் பயிற்சியும் மிக்க திறமைசாலிகளான ஊழியர்களை நாம் வேலைக்கமர்த்தி இருக்கிறோம்.

நாட்டின் வளர்ச்சியில் காப்புறுதித் துறைக்கு முக்கியமான ஒரு பங்குண்டு என்பது எம் நம்பிக்கை. முற்றிலும் ஒன்றிணைந்த விரிவான சேவையை நன்னம்பிக்கையுடன் மிகவும் விரும்பத்தக்கவாறு வழங்குவதன் மூலம் தேசிய வளர்ச்சிக்குக் குறிப்பிடத் தக்க பங்களிப்பை வழங்க நாம்

துறைகள் உட்பட சகல காப்புறுதித் தொழில் வகைகளையும் இன்று ஆரம்பமாகும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மேற்கொள்வதுடன், 1980-ம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆயுள் காப்புறுதித் தொழிலையும் நடத்தவுள்ளது.

காப்புறுதித் துறையில் அனுபவம் மிக்க சில அரசாங்க வர்த்தக நிறுவனங்கள் உள்ளிட்ட ஒரு பிரதான முகவர்கள் குழுவின் மூலம் தேசிய காப்புறுதிக் கூட்டுத் தாபனம் தொழிற்படும். இந்தக் குழு, கூட்டுத்தாபனத்தின் சார்பில், பரவலாக துணைக் கிளைகளை அமைத்து, காப்புறுதித் தொழில் வட்டம் ஒன்றை நிருவகித்து நடத்தும். தேசியக் காப்புறுதி கூட்டுத் தாபனம் இந்த அமைப்பின் மூலம் சகல காப்புறுதி வேலைகளையும் நடத்துமாயினும் பொது மக்கள் நேரடியாகவும் தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி

காணப்படும் சிறப்பான தொழிற்றிறமைச் சேவை, கூட்டுத்தாபனப் பொதுத் துறைக்கு அதிக பயன் தரும் விதத்தில் கிடைப்பதற்கும் வழி பிறக்கிறது.

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தன் ஊழியர்களுக்கும், மற்றும் பொதுத் துறைக் கூட்டுத்தாபனங்களுக்கும் மூலதனப் பங்குகளை வழங்கும் ஒரு முன்னோடிப் பணியையும் செய்யப்போகிறது. நம் நாட்டு மக்களுக்குக் கூட்டுத்தாபனம் வழங்கப் போகும் சேவைகளில் ஊழியர்கள் பெருமளவில் ஈடுபாடு கொள்ளத் தூண்டுவதற்கும்அவர்களின் உறுதியான பங்களிப்புக்கும் இந்த முயற்சி புத்தூக்கத்தை அளிக்குமென நான் நம்புகிறேன்.

திரு. வை. ப. முத்துக்குமாரண, பணிப்பாளர். (பொதுச் செயலாளர், அகில இலங்கை வர்த்தக சபை)
திரு. ஆர். என். எச். குணரத்ன, பணிப்பாளர் (பட்டயக் கணக்காளர்)
திரு. கருணாதாச ஜயவர்த்தன, பணிப்பாளர் (வழக்கறிஞர்)
திரு. ஏ. சி. ஜே. டி. அல்விஸ்
தற்காலிக சபைச் செயலாளர்.

சிரேஷ்ட முகாமையாளர்கள்

திரு. ஜே. ஐ. தங்கக் கோன், F.C.I.I. (பிரதம முகாமையாளர் பொதுக் காப்புறுதி)
திரு. டபிள்யூ. பொனவெஞ்சர், F.C.I.I. (முகாமையாளர் /கடற்றுறை)
திரு. ஸ்டான்லி ஜயசிங்க, (முகாமையாளர் / வாகனத் துறை)
திரு. டபிள்யூ. எஸ். எம். குலதிலக, (முகாமையாளர் /மறு-காப்புறுதி)
திரு. எஸ். ஐ. பெர்னாண்டோ, (முகாமையாளர் / தீ அபாயம்)
திரு. கே. கருணாரத்ன, (முகாமையாளர் / பலவினக் காப்புறுதி) B.Sc. (Eng.)
திரு. ஐ. சந்திரசிறி, (பிரதம ஆய்வாளர்)
திரு. ஐ. டி. மாரசிங்க (கணக்காளர்)

பிரதான முகவர்கள்

அக்லன்ட் பினன்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்
அய்ட்கன் ஸ்பென்ஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட்
கார்சன் கம்பர்பட்ச் அன்ட் கம்பனி லிமிட்டெட்
செலிங்கோ லிமிட்டெட்
ஜேம்ஸ் பின்லே அன்ட் கம்பனி லிமிட்டெட்
ப்ரொட்டெக்ஷன் அன்ட் இன்டெம்னிட்டி கம்பனி லிமிட்டெட்
செனரத்ன அசோசியேட்ஸ் லிமிட்டெட்
விட்டல் பவுஸ்டட்ஸ் லிமிட்டெட்

---

## தேசிய காப்புறுதிக் கூட்டுத்தானத் தலைவர் செய்தி

1961-ம் ஆண்டின் 2-ம் இலக்கக் காப்புறுதிச் சட்டம், 1963-ம் ஆண்டின் 11-ம் இலக்க நிதிச் சட்டம், இரண்டையும் இயற்றியதன் மூலம், சகலவிதக் காப்புறுதித் தொழில்களையும் நடத்துவதற்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை அரசாங்கம் நிறுவியது. காப்புறுதித் துறையில் நீண்டகால அனுபவம் பெற்ற பின்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அது கால வரையும் ஆயுட் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் பல்வேறு வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வந்தது. இந்தக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டதன் முக்கிய நோக்கங்கள் வருமாறு:—

காப்புறுதி செய்வோரின் நலன்களைப் பாதுகாத்தல்;
அது கால வரை சில குறிப்பிட்ட பிரதான நகரங்களில் மட்டும் நடைபெற்று வந்த காப்புறுதி வேலைகளை நாட்டின் சகல பாகங்களுக்கும் விஸ்தரித்தல்;
வெளிநாட்டுக் காப்புறுதிக் கம்பனிகளுடன் மறு காப்புறுதி செய்து கொள்வதை மட்டுப்படுத்தல்.
நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்துக்கு உதவுதல்.

காப்புறுதித் துறையில் ஏகபோக உரிமையைக் கொண்ட இந்தப் புதிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம், இந்த நோக்கங்களை முற்றாக நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. காப்புறுதித் துறையில் ஆரோக்கியமான ஒரு போட்டியை ஊக்குவிப்பதன் மூலம் ஏகபோக உரிமையை நீக்குவதே இந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சிறந்த வழி என்று அரசாங்கம் கருதியதால் மாண்புமிகு வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் 1979-ம் ஆண்டின் 22-ம் இலக்க விசேட காப்புறுதி ஏற்பாடுகள் சட்டத்தை முன்வைத்தார். எனவே, இந்தச்சட்டத்தின் கீழ் மாண்புமிகு வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் பெற்றுள்ள அதிகார உரிமையின்படி, எல்லா வித காப்புறுதித் தொழில்களையும் நடத்துவதற்கென்று தேசிய காப்புறுதி கூட்டுத் தாபனம் என்ற பெயரில் ஒரு புதிய தனியான கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டது. இந்த நாட்டு மக்களின் பரவலான காப்புறுதித் தேவைகளை நிறைவேற்றும் பணியில் இந்த கூட்டுத்தாபனமே உழைக்கப்போகிறது.

இன்று பொதுக் காப்புறுதிக் துறையில் தொழில் நடத்தத் தொடங்கத் துணையும் ஒத்துழைப்பும் வழங்கியமைக்காக, வர்த்தக கப்பற்றுறை அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளர், ஊழியர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### நோக்கங்கள்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டதன் முக்கிய நோக்கங்கள், 1961-ம் ஆண்டின் 2-ம் இலக்கக் காப்புறுதிச் சட்டம் இயற்றப்பட்டதற்கான அதே இலட்சியங்கள்தாம். ஆனால் புதிய கூட்டுத்தாபனம் காப்புறுதித் துறையில் ஓர் ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்திப் பொதுமக்களுக்குச் சிறப்பான அம்ச அடக்கமான சேவைகளை வழங்க உத்தேசித்திருக்கிறது என்பது மட்டுமே இதில் முக்கியமான குறிப்பிடத்தக்க விஷயம். இந்த இலட்சியத்தை எப்படியும் நிறைவேற்றியே தீர்ப்பதற்கு எம் பணிப்பாளர் சபையும் ஊழியர்களும் உறுதி பூண்டிருக்கிறார்கள்.

### கூட்டுந்தாபனத்தின் மூலதனம்

மாண்பு மிகு வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர், தனக்குள்ள அதிகாரத்தின் படி, கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப மூலதனம் 2 கோடி ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார். இந்த மூலதனத்தின் 60% அரசாங்க நிதி. 30% ஏனைய அரச கூட்டுத்தாபனங்களால் வழங்கப்படும்.
சட்ட பூர்வ துணை நிறுவனங்களும் இந்த மூலதனத்தில் பங்கு கொள்ளும்; மீதி 10% தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஒதுக்கப்படும். பொதுத் துறை நிறுவனங்களுக்கும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் உரிமையான பங்குகளை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுத் துறைக் கூட்டுத்தாபன நிதி முதலீட்டுத் திட்டத்தில் ஊழியர்களுக்குப் பங்குதாரர் உரிமை அளிப்பதன் மூலம் எம் புதிய கூட்டுத் தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்ற ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற வகையில், இது ஒரு சாதனை என்று கருதலாம்.

### தொழில் இயக்கம்

பரந்த அளவில் காப்புறுதி முகவர்களை நியமிப்பதன் மூலம் நாட்டுக்கு உருப்படியான சிறந்த சேவையை வழங்க வேண்டுமென்று தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் எதிர் பார்க்கிறது. காப்புறுதி செய்து கொள்ள விரும்பும் பொது மக்கள் நேரடியாகத் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு வரலாம். அல்லது விரும்பிய முகவரின் சேவையை நாடலாம். மக்களின் தேவைப்படி சிறந்த சேவை பெறத் தனியார் துறை நிறுவனங்களின் நல்லாம்சங்களை பொதுத்துறை வர்த்தக நிறுவனங்களுடன் ஒன்றிணைக்க வேண்டும் என்பதே எம் கருத்தாகும். இந்தக் கருத்தின் படி நாட்டிலுள்ள குறிப்பிட்ட தனியார் துறை முகவர்களின் உதவியையும் பெற முடியுமென்று. புதிய கூட்டுத்தாபனம் நம்புகிறது

### இலக்கு

இன்று தன் பொதுக் காப்புறுதித் தொழிலை ஆரம்பிக்கும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 1980/81-ம் ஆண்டிற்கான நாட்டின் பொதுக் காப்புறுதித் தொழிலில் சுமார் 30% தொழிலைத் தான் கைப்பற்ற முடியும் என்று நம்புகிறது. 1981/82-ம் ஆண்டில் 50% அளவுக்கு இந்த இலக்கை அதிகரிக்கும் இலட்சியத்தில் நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. மக்கள் மத்தியில் வளரும் காப்புறுதித் தேவைகளுடன் கூட்டுத்தாபனம் தன் இலட்சியங்களையும் நிறைவேற்றிக் கொள்ளும்

### கூட்டுத்தாபனத்தின் அமைப்பு முறை

கொழும்பில் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் தேசிய காப்புறுதிக் கூட்டுத் தாபனம் தன் பரந்த அளவிலான காப்புறுதி முகவராண்மை நிலையங்கள் மூலம் தொழிலைப் பெருக்கிக் கொள்வதுடன் நேரடியாகப் பொதுமக்களுடன் தொழில் செய்வதன் மூலமும் வருவாய்பெற உத்தேசித்திருக்கிறது. பொதுச் சேவை துறையில் வழக்கமாகப் பணியாற்றும் கரும லிகிதர் பதவிகள் அலுவலக ஊழியர் வரிசையில் இருக்கமாட்டா. கரும லிகிதர் முறைக்குப் பதிலாக, மக்களின் வளர்ந்து வரும் தேவைகளுக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இலகுவில் ஈடு கொடுக்கும் மாற்று முறை ஒன்றை அமைக்க வேண்டுமென்பது நீண்ட கால அனுபவத்தில் உணரப்பட்டிருக்கிறது. எனவே, நேரடி உதவியாளர் அல்லது நேரடிச் செயலாளர் என்று அழைக்கப்படும் அதிகாரிகள் நியமன முறை ஒன்றைப் பரீட்சித்துப் பார்ப்பதே உகந்தது என்று தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கருதுகிறது. ஆனால் இதற்கு அதிகமான தொகையில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் தேவை என்பது உண்மையே! எனினும் படிப்படியாக இந்தத் தேவையை நிறைவு செய்து கொள்ள முடியும் என்று கூட்டுத்தாபனம் நம்புகிறது மேலும், பூரண பயிற்சி பெற்ற காப்புறுதி ஊழியர்களுக்கு நாட்டில் இருக்கும் தட்டுப்பாட்டை உணர்வதால், முடிந்தளவு காப்புறுதி ஊழியர்களைக் கவரும் வசதிகளையும் கூட்டுத்தாபனம் வழங்கவிருக்கிறது.

கூட்டுத்தாபனத்தின் அங்குரார்ப்பணம் வெற்றி பெற உதவிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை புரிவதற்கென்றே தன்னை அர்ப்பணித்துக் கொள்ள, கூட்டுத்தாபனம் உறுதி எடுக்கிறது.

— லயனல் பெர்னாண்டோ

எங்கள் சின்னம்

சொத்துக்கள் பொக்கிஷங்களுக்குப் பல நூற்றுண்டுகளாகப் பாதுகாவல் அளிக்கும் பாரம்பரைக் காவல் தெய்வமாகிய வைரவர் சின்னம், வாடிக்கையாளரின் நலன்களைப் பேணிக் காக்கும் கூட்டுத்தாபனத்தின் கொள்கையை உருவகப்படுத்துகிறது.

## உபயமளித்தோர்

அக்லன்ட் பினன்ஸ் அன்ட் இன்வெஸ்ட் மென்ட்ஸ்
அய்ட்கன் ஸ்பென்ஸ் அன்ட் கம்பனி
கார்சன் அன்ட் கம்பர்பட்ச் கம்பனி லிமிட்டெட்
செலிங்கோ லிமிட்டெட்
ப்ரொட் டெக்ஷன் அன்ட இன்டெம்னிட்டி கம்பனி லிமிட்டெட்
ஜேம்ஸ் பின்லே அன்ட் கம்பனி
செனரத்ன அசோசியேட்ஸ் லிமிட்டெட
விட்டல் பவுஸ்டட்ஸ் லிமிட்டெட
கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்
கொழும்பு கமேஷியல் கம்பனி (தேயிலை) லிமிட்டெட் (அரச வர்த்தக நிறுவனம்)
ஸ்ரீ லங்கா ஏற்றுமதிக் கடன்வசதிக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
ஸ்ரீ லங்கா துறைமுகக் கட்டுப்பாட்டகம்
சது சல
ஸ்ரீ லங்கா கப்பற் கூட்டுத்தாபனம்
ஸ்ரீ லங்கா அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம்
ஸ்ரீ லங்கா வர்த்தக (கூட்டிணைந்த ஏற்றுமதி) கூட்டுத்தாபனம்

# தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

3-ம் மாடி, 660, காலி வீதி,
கொழும்பு 3. தொலைபேசி: 81344

Almeida Associates

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதியதோர் காப்புறுதி யுகத்தின் பொற்கதவு திறக்கிறது

## மாண்புமிகு வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் லலித் அத்துலத்முதலி அவர்களின் வைபவத் திறப்பு விழாவைத் தொடர்ந்து வாடிக்கையாளருக்குப் பணி புரிய, தேசியக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வாசல் இன்று திறக்கிறது.



மூலம் ஆரோக்கியமான போட்டியை ஊக்கப்படுத்தும் அரசாங்கக் கொள்கைக்கு ஏற்ப இந்தக் கூட்டுத்தாபனம் திறுவப்பட்டுள்ளது.

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்களும் ஊழியர்களும், காப்புறுதியின் அதிக பட்ச பயன்களை ஆகக் கூடிய திறமையுடன் வழங்கும் நோக்கம் கொண்டு, தங்கள் வாடிக்கையாளர்களுக்கு நேரடியான தனித்துவச் சேவை புரிய உறுதி பூண்டிருக்கிறார்கள். இந்த நோக்கத்தை நிறைவேற்ற, கூட்டுத் தாபனத்தின் எல்லா மட்டங்களிலும் பணி புரிய, மக்கள்

உத்தேசித்திருக்கிறோம். நாம் இருதய பூர்வமாக விரும்பும் வெற்றியை ஈட்டுவோம் என்பதில் எமக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

தீ அபாயம், கடல் அபாயம், வாகன அபாயம், பலவினக் காப்புறுதி முதலிய பல்வேறு துறைகள் உட்பட சகல காப்புறுதித் தொழில் வகைகளையும் இன்று ஆரம்பமாகும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மேற்கொள்வதுடன், 1980-ம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆயுள் காப்புறுதித் தொழிலையும் நடத்தவுள்ளது.

செய்து கொள்ளலாம். விரிவான வலைப் பின்னலாகப் பிரதிநிதிகளையும் துணைப் பிரதிநிதிகளையும் நியமிக்கும் முயற்சி நாட்டில் அதிக வேலை வாய்ப்பை உண்டாக்கும் என்பதிலும் ஐயமில்லை. அத்துடன், தொழிலை இப்படிப் பகிர்ந்து கொள்வதால், தனியார் துறையில் முனைப்பாகக் காணப்படும் சிறப்பான தொழிற்திறமைச் சேவை, கூட்டுத்தாபனப் பொதுத் துறைக்கு அதிக பயன் தரும் விதத்தில் கிடைப்பதற்கும் வழி பிறக்கிறது.

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தன் ஊழியர்களுக்கும், மற்றும் பொதுத் துறைக் கூட்டுத்தாபனங்களுக்கும் மூலதனப்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
பணிப்பாளர் சபை
திரு. லயனல் பெர்ணண்டோ. தலைவர் (இலங்கை நிர்வாக சேவை)
திரு. தர்மதேவா ஜயசிங்க, துணைத்தலைவர், (வழக்கறிஞர்)
திரு. வை. பீ. முத்துக்குமாரண, பணிப்பாளர். (பொதுச் செயலாளர், அ... இலங்கை வர்த்தக சபை)
திரு. ஆர். என். எச். குணரத்ன, பணிப்பாளர் (பட்டயக் கணக்காளர்)
திரு. கருணதாச ஜயவர்த்தன, பணிப்பாளர் (வழக்கறிஞர்)
திரு. ஏ. சீ. ஜே. டி. அல்விஸ்
தற்காலிக சபைச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகம் எங்கும்

# அரச அலுவலகங்கள் முன் அதிமுக உண்ணாவிரதம்!

## எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, மார்ச் 27 தமிழகம் எங்குமுள்ள அரசாங்க அலுவலகங்களின் முன் ஏப்ரல் முதல் வாரத்தில் அ. தி. மு. க. உண்ணாவிரதம் மேற்கொள்ளுமென்று அ. தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது! "உத்தேச உண்ணாவிரதம் ஏப்ரல் 4 அல்லது 5ம் திகதி நடைபெறும்.

திராவிட முன்னேற்றக்கழக அரசு மீது முன்னர் நாப குற்றச்சாட்டுகளைச் சுமத்திய போது அந்த அரசின் மீதுநடவடிக்கை எடுக்க நான்கு ஆண்டுகள் மத்திய அரசு காத்திருந்தது

ஆனால் இப்போது ஒரு முன்னறிவிப்புக்கூட இல்லாமலேயே முழுப்பெரும்பான்மை பலமுடன் ஆட்சி செலுத்திய அ. தி. மு. க. அரசை ஒரே நாளில் பதவியிலிருந்து நீக்கியது மத்திய அரசு." (இ)

## ரஷ்ய குண்டுவீச்சுக்கு 40,000 ஆப்கான்மக்கள் பலி!

இஸ்லாமாபாத், மார்ச். 27 ஆப்கானிஸ்தானில் ரஷ்யப் படைகளின் குண்டுவீச்சுக்களினாலும், துப்பாக்கிப் பிரயோகத்தினாலும் 40ஆயிரம் ஆப்கானிஸ்தான் மக்கள் பலியாகினரென்று ஆப்கான் கலகக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆப்கான் கிராமங்களையும் நகரங்களையும் ரஷ்ய வீரர்கள் அழித்ததுடன் பெண்கள், குழந்தைகள் வயோதிபர்களைப் டுகொலை செய்தனரென்றும் இஸ்லாமிய புரட்சி இயக்க கலகக்காரர்கள் தெரிவித்தனர்.

முஸ்லீம்களை அழிக்க விஷவாயு பயன்படுத்தப்பட்டதாகவும் 3 லட்சம் பேர் தமது வீடுகளைவிட்டு வெளியேறி அகதிகளாகியுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (இ)

## இலங்கைக்குகடத்தமுயன்றபுடவைகள் வைக்கோல் போருக்குள் மீட்பு!

சென்னை, மார்ச். 27

இலங்கைக்குக் கடத்திச்செல்லும் நோக்குடன் வைக்கோல் போருக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த 40 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்திய துணிகளை சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர்.

தஞ்சாவூரிலுள்ள கிராமம் ஒன்றிலேயே இப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

மதுரை சுங்கப்பகுதியினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைஅடுத்தே இப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. (இ)

## சிமெந்து தொழிற்சாலையில் திருடினாராம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் இரும்புத்தகடுகள், கம்பிகளைத் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபரை மல்லாகம் நீதிபதி 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

காங்கேசன்துறை பொலிசைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர், வீரசிங்கா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி ரோந்து சென்ற சமயம் வழியில் ஒருவர் இரும்புத் தகடுகள், கம்பிகள் போன்றவற்றை சைக்கிளில் எடுத்துச் சென்றபோது அவரை நிறுத்தி விசாரித்த சமயம் கொல்லங்கலட்டி கிளானையைச் சேர்ந்த துரை சண்முகநாதன் என்பவரிடம் அவற்றை வாங்கியதாக தெரிவித்தாராம்.

இதனையடுத்து பொலிசார் இந்த நபரது வீட்டை சோதனை செய்த சமயம் அங்கு பெறுமதிவாய்ந்த இரும்புத்தகடுகள், கம்பிகள் இருந்ததுடன் அவை சிமெந் தொழிற்சாலையிலிருந்து திருடப்பட்டவையெனவும் தெரியவந்தது.

இந் நபரைக் கைதுசெய்த பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி திரு சி. ஆர். இராஜசிங்கம்விசாரணையை ஒத்திவைத்தார். (கு)

## பாய்ந்து வந்த புலியைக் கோடரியால் வெட்டி கொன்ற வீரப்பெண்மணி!

புதுடில்லி, மார்ச். 27 ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற ஒரு விசேஷ விழாவில் வீரச்செயல்களை புரிந்தமைக்காக 79 ராணுவ வீரர்களுக்கு தமது பாராட்டுதல்களையும் விருதுகளையும் அளித்து ராஷ்டிரபதி சஞ்சீவ ரெட்டி கௌரவித்தார்.

இவர்களில் 8 பேர்கள் காலஞ்சென்ற ராணுவ வீரர்களாவர். ராஷ்டிரபதி பவனிலுள்ள தர்பார் மண்டபத்தில் இவ்விழா மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

பதினைந்து ராணுவ வீரர்கள் பரமவசிஷ்ட சேவா பதக்கத்தைப் பெற்றனர். 36 வீரர்கள் அதிவசிஷ்டசேவா பதக்கங்களைப் பெற்றனர். கீர்த்திசக்கர விருது ஒரு நபருக்கு வழங்கப்பட்டது. 28 வீரர்களுக்கு ஷௌர்யா சக்கர விருதுகள் வழங்கப்பட்டன. ராஷ்டிரபதி சஞ்சீவ ரெட்டி இவர்களனைவருக்கும் பதக்கங்களை அணிவித்து விருதுகளையும் வழங்கினார்.

மிஜோராமைச்சேர்ந்த ஸாடிங்கி என்ற கிராமப் பெண் தமக்கு அளிக்கப்பட்ட விருதைப்பெற வந்தபோது அங்கு கூடியிருந்தவர்கள்கட்டிடமே அதிரும்படியாக கைகொட்டி வரவேற்றனர். அந்தப்பெண் தன் மீது பாய்ந்து கொல்வதற்கு வந்த ஒரு புலியை கோடரியால் வெட்டிக் கொன்று வீரச்செயல் புரிந்திருக்கிறாள். அதற்காகவே கூடியிருந்தோர் பலமாகக் கைதட்டிஅந்த வீரப்பெண்ணுக்கு தங்கள் பாராட்டுதலைத்தெரிவித்துக் கொண்டனர்.

மிஜோராமில் உள்ள லங்லேப் மாவட்டத்தில் புவார்புவைய் என்ற இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. அப்பெண்ணுக்கு ஷௌர்ய சக்ரா விருது அளிக்கப்பட்டது.

## தென் மாநிலம் ஒன்றில் இந்தியபாராளுமன்ற கூட்டம் ஆலோசிக்கப்படும் என்கிறார் காந்தி

புதுடில்லி, மார்ச். 27 இந்தியப்பாராளுமன்றக்கூட்டத் தொடரை தென்மாநிலமொன்றிலும் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி உறுதியளித்துள்ளார்.

இக்கோரிக்கைதொடர்பான 233 எம். பி.க்கள் கையொப்பமிட்ட மகஜரைச் சமர்ப்பித்த 10 எம். பி.க்கள் குழுவிடமே திருமதி காந்தி மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

பாராளுமன்றத்தின்கூட்டத் தொடர் ஒன்றை பங்களூரில் நடத்தலாமென இக்குழு தமது மகஜரில் தெரிவித்துள்ளது. (இ)

## சுப்பிரமணியம்- கருணாநிதி சந்திப்பு

சென்னை, மார்ச். 27 தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியை நேற்று அவரது இல்லத்தில்சந்தித்து பேச்சு நடத்தினர்.

அரைமணிநேரம் நிகழ்ந்த பேச்சுவார்த்தையின்போது எதிர்வரும் சட்டசபைத் தேர்தல் குறித்து இருவரும் கலந்தாலோசித்தனர். (இ)

இளைஞர் கடத்தல் வழக்கு:

## நான்கு எதிரிகள் விடுதலை; ஐந்தாம் எதிரிக்கு அபராதம்

(கொழும்பு)

இளைஞரைக் கடத்திச் சென்று காயம் விளைவித்ததாக குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், நான்கு எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஐந்தாவது எதிரிக்கு முதலாவது குற்றச்சாட்டில் விடுதலை செய்யப்பட்டு 2வது குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டு 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ரியூடர் டீ அல்விஸ் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் நாவலையைச் சேர்ந்த விக்கிரமசிங்காவும், அவரது இரு சகோதரர்களும் மற்றும் இருவரும், பொனிபேஸ் பெர்னாண்டோவை கடும்காயம்விளைவிக்கும் நோக்கமாக கடத்திச் சென்று காயம் விளைவித்ததாக [illegible] ருந்தது. எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணிகள் எஸ். பெரேரா, எஸ். பெர்னாண்டோ ஆஜரானார்கள். தலைமறைவாக இருந்துவந்த 2ம் எதிரி தியோல் இல்லாமல் விசாரணை நடைபெற்றது. (கு)

## பரமஹம்சர் இலவச திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

இன்று பிற்பகல் நான்கு மணியளவில் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவ மன்றத்தின் சார்பில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படக் காட்சி நடைபெறும்.

ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் கொக்குவில் கிளையினரின் வழிபாடும், வித்தியாலய மாணவிகளின் கூட்டு வழிபாடு பக்திக்கீதங்களும் ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் திரு ஏ. தெட்சணாமூர்த்தியின் சொற்பொழிவும் சிறப்பு அம்சங்களாக இடம்பெறும்.

## உதவி அரச அதிபருக்கு பாராட்டுவிழா

(வண்ணார்பண்ணை)

வேலணை உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி அண்மையில் கரவெட்டிக்கு இடமாற்றலாகச் சென்ற திரு. மு. தம்பிமுத்துவின் சேவைகளைப் பாராட்டும் முகமாக நயினாதீவு வடக்கு கிராம அபிவிருத்திச்சங்கம் சேவை நலம் பாராட்டுவிழா ஒன்றை நடத்தியது

சங்கத்தலைவர் திரு. . வை கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த இப்பிரிவுபசரணை வைபவத்தின்போது நயினாதீவு மக்கள் சார்பில் மின் விசிறி ஒன்று திரு. மு. தம்பிமுத்துவுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

தற்பொழுது அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் திரு. ஆ. குணநாயகமும் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (கு)





ஓர்தீன் வெற்றிவீரன்

பயிர்க்கொட்டிகள், கனி துளைக்கும் பூச்சிப்புழுக்கள் உங்கள் வெங்காயம், மிளகாய், கத்தரிக்காய், கோவா போன்ற பயிர்களை நாசம் செய்கின்றனவா?

ஓர்தீன் S. P. 75 இந்தப் பூச்சிப்புழுக்களை அழித்து கூடுதலான விளைச்சலைத் தருவதோடு நெற்பயிர்களைத் தாக்கும் பூச்சி புழுக்களையும் அழிக்கவல்லது.

யாழ்ப்பாணம் திண்ணைவேலியில் மேற்கொள்ளப்பட்ட திறன்காண் சோதனையில் சாதனையை நிலைநாட்டிய ஓர்தீன் S. P. 75 ஒரு ஹாகுரேஸ் விவசாய ரசாயனம்.

எல்லா ஹாகுரேஸ் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.




ஹரிசன் அன்ட் குரேஸ்பீல்ட் (கொழும்பு) லிமிட்டெட்.

330, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனோஹரா** A யாழ்ப்பாணம்

தினசரி 10-30 a.m., 2-30, 6-30, & 9-45 p.m.

விஜயகுமார்-ஸ்ரீவித்யா-தங்கவேலு

**ஆசை 60 நாள்** (புதிய பிரதி)



2nd Crowded week

**SRIDHAR** JAFFNA

Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 & 9 30 p.m.

**THAT MAN BOLT**

Entertainment in Karate, Judo and Kick-Boxing

1-4-80 முதல்

சிவாஜி-விஜயநிர்மலா-சுந்தரராஜன்

**ஞா ன ஒ ளி**



**SANTHI** JAFFNA — Phone 7642.

Daily 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.

He's Six feet Six inches of dynamite,
She's Crazy, Absolutely crazy!

BO SVENSON and CYBILL SHEPHERD
...together they deliver the goods in

**"SPECIAL DELIVERY"** in color

America's Hottest New Stars Pitted
Against Each other in more ways than one!

DON'T MISS THIS FIRST - CLASS ACTION FILM
MORE SUITED FOR ADULTS



**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி 4

சிவாஜி - பத்மினி - லலிதா

**தூக்குத்தூக்கி**

**லிடோ** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் போன்: 76

**பொம்மைக் கல்யாணம்**



2nd Crowded week

**REGAL** JAFFNA. Phone: 360

Daily at 10-30 a. m 2-00, 4-30, 7-00 & 9-30 p m

ROGER MOORE as JAMES BOND

**LIVE AND LET DIE**

(More suited for Adults)



**ராஜா** (யாழ்ப்பாணம்) 96-வது நாள் தினசரி 4 காட்சிகள்

சிவாஜி-விஜயா-சந்திரமோஹன்
கவிதா நடித்த

**ஜெனரல் சக்கரவர்த்தி**

(ஈஸ்ட்மென் கலர்)



கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் வெற்றிநடை போடுகின்றது

தினசரி 10-00, 1-30, 4-30, 7-15, 10-00

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)

"கிழக்கே போகும் ரயில்'' புகழ்
★ சுதாகர் ★ ராதிகா ★ விஜயன்
★ ரதி ★ பாக்கியராஜ் ★ கலா
மற்றும் பலர் நடித்த

காதல், இசை, நிறைந்த தீந்தமிழ் திரையோவியம்

**நிறம் மாறாத பூக்கள்**

(வண்ணப்படம்)

திரைக்கதை டைரக்ஷன்:
வெள்ளிவிழா இயக்குநர்
பாரதிராஜா

இசையமைப்பு:
இளையராஜா

முக்கிய குறிப்பு:
இரவு 7-15க்கு காண்பிக்கப்படும் காட்சி 9-40க்கு முடிவடையும்

1-4-80 முதல் தினசரி 4 காட்சிகள்


## சமாதான நீதிபதி



சங்கரத்தையைச் சேர்ந்தவரும் வட்டுக்கோட்டை வாசியுமான திரு. ஆறுமுகம் சங்கரப்பிள்ளை அண்மையில் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி திரு. எம். ஜமீல் முன்னிலையில் யாழ். மாவட்டத்திற்கான சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பிரபல சமூக சேவையாளரும், சமயத்தொண்டருமான இவர் குருநாகல் சைவமகா சபையின் உப தலைவராகவும், சங்கரத்தை முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபையின் தலைவராகவும் பணியாற்றியதுடன், வட்டுக்கோட்டை சிவநெறிச் சங்கத்தின் போஷகராகவும், இணக்க சபைத்தலைவராகவும் பணிபுரிந்துள்ளார்.

பொது வேலைப்பகுதி மேற்பார்வையாளராயிருந்து இளைப்பாறிய இவர் தற்பொழுது வட்டுக்கோட்டைக் கிராமத்தின் வளர்ச்சி கருதி பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றை அமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். (அ)


**வெஸ்லி** (மானிப்பாய்)

தினசரி: 6-30, 9-30,
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்—விஜயா

**ஜானகி சபதம்**



**ஹரன்** யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்—ராஜ்ஸ்ரீ

**அனுபவம் புதுமை**



**நாகம்ஸ்** (சுன்னாகம்)

தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
A.V.M. ராஜன்

**தெய்வம்**

(கலர்-புதிய பிரதி)


"விளையாட்டுப் போட்டிகள்

# சிறந்த பண்புகளை

## மாணவருக்குப் போதிக்கின்றன"

அச்சுவேலி

"விளையாட்டுப் போட்டிகள் மூலமே மாணவர்கள் வெற்றியையும் தோல்வியையும் தாங்கிக் கொள்ளும் பயிற்சியினைப் பெறுகின்றனர். அத்துடன் சிறந்த ஒழுங்கு முறையையும் மாணவருக்கு விளையாட்டுப் போட்டிகள் போதிக்கின்றன'' என்று யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களப் பிரதமகல்வியதிகாரி ஜனாப் எம். எம். மன்சூர் அச்சுவேலி மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையில் தெரிவித்திருந்தார்.

கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. எ. வி. தங்கராசா கொடியேற்றி வைத்து, விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்துவைத்தார். எஸ். எஸ். துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஜனாப் மன்சூர் மேலும் பேசுகையில் ''விளையாட்டுப்போட்டிகள் மாணவருக்குச் சிறந்த பண்புகளை அளிப்பதனால் வட்டார ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் கல்வி இலாகா போட்டிகளை நடாத்திவருகின்றது. இப்போட்டிகள் போதாமையினால் கல்வி இலாகா புதிய திட்டமொன்றினையும் தயாரித்துள்ளது. வகுப்பு உடற்பயிற்சி நேரத்தில் ஒவ்வொரு மாணவரின் திறமைகளைப் பதிவுசெய்யப் பதிவுப்புத்தக முறையினை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம் அனைத்து மாணவர்களின் திறமைகளும் வெளிக்கொண்டு வரப்படச்சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது'' என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. இ. கதிரவேற்பிள்ளை கலந்து கொண்டார். திருமதி கதிரவேற்பிள்ளை பரிசில்களை வழங்கினார். இப்போட்டியில் முதலாமிடத்தை செல்லையா இல்லமும், 2ம் இடத்தினை சாண்டல் இல்லமும், 3ம்இடத்தினை பீரிஸ் இல்லமும் பெற்றன. (அ)

# கொழும்பு - யாழ். பஸ்ஸில் குருக்கள்திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த தனியார் பஸ்ஸில் பிரயாணம் செய்த மதகுரு ஒருவர் பஸ்ஸிலேயே மரணமானார்.

மரணமான நல்லூர் சிவன் கோவில் குருக்களான ஆனந்த நாராயண ஐயர் சிதம்பரநாத சாஸ்திரிகளின் (65 வயது) மரணம் பற்றிய விசாரணை நேற்றுக்காலை யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. மரண விசாரணையின் போது காந்திகேசக் குருக்கள் இரத்தினகைலாசநாதக்குருக்கள் சாட்சியமளிக்கையில் இம்மாதம் 12-ம் திகதி தானும் வேறு பல குருக்கள் மாரும் முனீஸ்வரம் முன்னை நாதஸ்வரர் ஆலயத்திற்கு சென்றதாகவும் அந்தக்குழுவில் மரணமானவரும் முனீஸ்வரத்திற்கு வந்து ஆலயசமயக்கிரியைகளில் ஈடுபட்டார் என்றும் கூறினார்.

கிரியைகள் யாவும் முடிவடைந்து நேற்று முன் தினம் மாலை மரணமானவரும் தாங்களும் கொழும்பில் இருந்து புறப்பட்டு வந்ததாகவும் மரணமானவர் ஏற்கனவே இருதய நோயால் பீடிக்கப்பட்டிருந்தார் என்றும் கூறினார். அண்மையில் அவருக்கு ஒரு சத்திர சிகிச்சையும் நடைபெற்றது அதனாலும் அவர் மேலும் பலவீனப்பட்டிருந்தார். யாழ்ப்பாணம் வந்துகொண்டிருக்கும் போது வவனியாவில் மரணமானவர் இறங்கி மூக்குத்தூள் போட்டுவிட்டு மீண்டும் பஸ்ஸில் ஏறிஅமர்ந்து கொண்டார். பஸ் முறிகண்டியில் நிற்பாட்டப்பட்டபோது பஸ்ஸைவிட்டுஇறங்கிவெளியே வரவில்லை. அவர் தூங்குகிறார் என நினைத்து நாங்கள் அவரை எழுப்பவில்லை. நேற்றுக்காலை பஸ் யாழ்ப்பாணம் வந்தபோது நாம் அவரை எழுப்பினோம். அவர் எழும்பவில்லை'' என்றார்.

டாக்டர் திருமதி பத்மாவதி சிவநாயகமும் சாட்சியமளித்தார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார். (கொ)

## தொலைபேசி...

(3ம்பக்கத் தொடர்ச்சி)

கின்றது. ஆனால் இவ்வபிவிருத்தி வேலைகளை அரசாங்க ஊழியர்கள் விரைவாகவும், பொறுப்புணர்ச்சியுடனும் நிறைவேற்றி வைக்கத் தவறினால் நாம் ஒருபோதும் அபிவிருத்தி காண முடியாது. இங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள வானொலி தொலைபேசித் தொடர்புப் பரிவர்த்தனை நிலையத்தினால் இப்பட்டின மக்களின் பெருங்குறையொன்று தீர்த்து வைக்கப்பட்டுள்ளது'' என்றார்.

## மருத்துவமாதர் விளையாட்டுப்போட்டி

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருத்துவ மாதர் சங்கம் மருத்துவ மாதர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியொன்றை ஜூன் மாதம் 22ம் திகதியன்று சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடாத்துவதென்று தீர்மானித்துள்ளது. சைக்கிள் ஓட்டம், கயிறடித்தல், குண்டெறிதல், பலூன் ஊதுதல், தேங்காய் துருவுதல், விநோத உடை ஆகிய பல்வேறு போட்டிகளை சங்க அங்கத்தவர்களான மருத்துவ மாதர்களுக்கிடையில் நடாத்துவதென சங்கத்தின் நிர்வாக சபை தீர்மானித்துள்ளது.


**ராணி** (யாழ்நகர்) குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும் தினசரி 4 காட்சிகள்

இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த

**இருவர் உள்ளம்**

(புதிய பிரதி)

திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

From 1st April 1980

**The Gumball Rally**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷார்ப் பாட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)
சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்
SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
(சுன்னாகம் மக்கள் வங்கி முன்பாக)

ஈழநாடு The EELANAADU
50 சதம்

## இந்தியாவில் ஒரு கோடி 40 லட்சம் பேருக்கு வேலையில்லை

புதுடில்லி மார்ச் 27 இந்திய தொழில் பரிவர்த்தனை நிலையத்தில் வேலை கேட்டு விண்ணப்பித்தவர் தொகை ஒருகோடி 40 லட்சமாக உயர்ந்துள்ளது. இத்தகவலை மத்தியதொழில் நல அமைச்சர் கே.பி. பட்ணயக் இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். [கு]

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...
டில்கா வாச்வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி.
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



# கடலில் மிதத்தல்: சாதனை முயற்சி

(யாழ்ப்பாணம்)

கடலில் பல நிலைகளில் மிதந்து புதிய உலக சாதனையை நிலைநாட்டும் முயற்சியை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. துரைராஜா யோகரத்தினம் இன்று மேற்கொள்கின்றார்

வல்வெட்டித்துறை ரேவடிக்கடலில் இன்று காலை ஆரம்பிக்கும் புதிய சாதனை முயற்சியை ஆழிக்குமரன் ஆனந்தன் தொடக்கி வைப்பார்

திரு யோகரத்தினம் கைகளையும் கால்களையும் கட்டியபடி கடலில் மிதப்பதுடன் கடல் நீருக்குள் நடத்தல் மிதந்தபடி யோகாசனம் செய்தல் போன்ற சாதனைகளை மேற்கொள்ளுவார்.

இப்புதிய சாதனை முயற்சிக்கு இலங்கை நீச்சல் கழகம், பருத்தித்துறை வை. எம் சி ஏ. கழகம், லயன்ஸ்கழகம் ஆகியன மத்தியஸ்தம் வகிக்கவுள்ளன.

சுமார் 75 மணிநேரம்வரை கடலில் மிதந்து புதிய சாதனையை மேற்கொள்ள விருக்கும் திரு. யோகரெத்தினம் கடந்த ஏப்ரல் மாதம் 18-ம் திகதி முதல் 20-ம் திகதி வரை 52 மணிநேரம் கடலில் மிதந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதியின் காரியதரிசி கடிதம்

புதிய உலக சாதனை முயற்சி சம்பந்தமாக வல்வெட்டித்துறை 'புளூஸ் அட்வென்சரர் கழகத்துக்கு ஜனாதிபதியின் செயலாளர் கடந்த 24-ம் திகதி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற்படி சாதனை முயற்சி சம்பந்தமாக ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட கடிதம் கிடைத்ததென்றும் வேறு ஒரு நிகழ்ச்சியில் ஜனாதிபதி கலந்து கொள்ள வேண்டியிருப்பதால் அழைப்பை தாம் ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக தெரிவிக்குமாறு தம்மை ஜனாதிபதி பணித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (கொ)

## விண்ணப்பிக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐம்பது சதமாகவும், 19 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஐந்து ரூபா முத்திரைக் கட்டணம் செலுத்த வேண்டும். கிராமசேவகர்களின் அனுமதியுடன் அங்கிகரிக்கப்பட்ட புகைப்படம் பிடிக்கும் நிலையங்களில் 2-50 சதம் செலுத்தி புகைப்படங்களை எடுத்துக் கொள்ளலாம்.

"அடையாள அட்டை பெறுதவர்களைக் கண்டுபிடிக்கும் பணிகளில், ஏப்ரல் 7 ம் திகதி முதல் அவ்வப்பகுதி கிராமசேவகர்களும், பொலிசாரும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள அதிகாரிகளும் ஈடுபடுவர். அடையாள அட்டைகள் கிடைக்காதவர்கள் விண்ணப்பித்ததற்கான பற்றுச்சீட்டையாவது அதிகாரிகளுக்கு காண்பிக்கவேண்டும். அடையாள அட்டைகள் தொலைந்திருந்தால் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று முறைப்பாடு செய்து, பொலிஸ் நிலையத்தில் அதற்கான விண்ணப்பபடிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கவேண்டும்.

"புதிதாக அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு திணைக்களம் மூன்று மாதத்தில் அடையாள அட்டைகளை விநியோகிக்கும்." (கெ-கு)

......

## வாசுதேவ யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

புதிய சமசமாஜக்கட்சியின் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரா நாளை யாழ்ப்பாணம் வருகிறார்.

இயக்கப் போராட்டங்களுக்காக வடபகுதியில் நிதி சேகரிக்க இங்கு விஜயம் செய்யும் திரு. நாணயக்காரா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி வதிரி சனசமூக நிலையத்தினர் நடாத்தும் கருத்தரங்கில் "தமிழ் பேசும் மக்களும் புதிய சமசமாஜக்கட்சியும் என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

இம்மாதம் 31-ம் திகதி யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெறும் கருத்தரங்கில் "ஆட்டங்காணும் ஜே. ஆர். ஆட்சியும் அடுத்த அரசும்' என்ற தலைப்பில் உரையாற்றுவார். (கு)

## இன்றைய நிகழ்ச்சி

(வட்டுக்கோட்டை)

சங்கரத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவ இன்றைய திருவிழாவில் பிரம்மஸ்ரீ சி. வை. நித்தியானந்தசர்மா "பக்த கௌரி" என்னும் பொருள்பற்றி இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார்.

"திருவாசகம் என்னும் தேன்" என்னும் பொருள் பற்றி திருவாசகமணி க. மாணிக்கவாசகர் சொற்பொழிவாற்றுவார். திரு. என். ஆர். கோவிந்தசுவாமியின் நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. [வெ]

## மரண அறிவித்தல்
### திருமதி ம. ஞானம்பிகை

ஞானம்பிகை (தேவி) காலமாகிவிட்டார். இவர் தென்மராட்சி மேற்கு ப. நோ. கூட்டுறவு கிளை முகாமையாளர் மனோகரனின் அன்பு மனைவியும், லவக்குமாரன், மைதிலி, மனோகரி ஆகியோரின் அன்புத் தாயாருமாவர். ஈமக்கிரிகைகள் இன்று 28-3-80 வெள்ளி சாயந்தரம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

கைதடி-நாவற்குழி
(மறவன்புலோ)
கைதடி.

5333

## மரண அறிவித்தல்
### திரு. நமசிவாயம் தம்பு



திரு. நமசிவாயம் தம்பு (இளைப்பாறியநில அளவையாளர் மலேசியா, கோப்பாய்) காலமானார். இவர் திருமதி தங்கம் தம்பு அவர்களின் அன்புக் கணவரும், திரு. பஞ்சாட்சரம் (சிங்கப்பூர்), திரு. T. செல்வராசா (ஆசிரியர்) திருமதி செல்வராணி சண்முகநாதன், திரு. T. தேவராஜா (நிலஅளவையாளர் ஈராக்) திருமதி வசந்த தேவி சுகுணதீரன், திருமதி இந்திராணி கதிரவேலு (கூட்டுறவு பரிசோதகர்) திரு. அ. ஆனந்தராஜா (மகாராஜா நிறுவனம்) திரு. ரவீந்திரராஜா (ரவி இன்டஸ்றீஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. E K. சண்முகநாதன் (அதிபர் யாழ். மத்திய கல்லூரி), திரு. R. சுகுணதீரன் (கணக்காளர் வீடமைப்புத் திணைக்களம், கொழும்பு), திரு. T. கதிரவேலு (அதிபர் வவனிக்குளம் மகாவித்தியாலயம்), திருமதி சரோஜினி பஞ்சாட்சரம், திருமதி B. செல்வராஜா (விரிவுரையாளர் பலாலி ஆசிரியபயிற்சிக் கலாசாலை) திருமதி சரோஜினி தேவராஜா, திருமதி அனுசூயா ஆனந்தராஜா, திருமதி யோகராணி ரவீந்திரராஜா ஆகியோரின் மாமனாருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 28-03-80 வெள்ளிக்கிழமை பி. ப. 3-30 மணியளவில் கோப்பாயில் நடைபெறும். 5330

## நிருபர்கள் தேவை

'ஈழநாடு' நாளிதழுக்கு கீழ்க்காணும் இடங்களில் கடமையாற்ற செய்தி நிருபர்கள் தேவை. கல்வித் தகைமை, அனுபவம் என்பவற்றைக் குறிப்பிட்டு 05-4-80 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முல்லைத்தீவு, முள்ளியவளை,
முத்தையன்கட்டு, புதுக்குடியிருப்பு,
கிளிநொச்சி, வவனியா,
மாங்குளம், பூநகரி,
முழங்காவில்.

ஆசிரியர்,
"ஈழநாடு"
த. பெ. இலக்கம் 49
யாழ்ப்பாணம்.

மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி,மதுரை,பம்பாய்,கோலாலம்பூர்,சிங்கப்பூர்,பரிஸ்,லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News paper at the General Post office Sri Lanka under No GE/8948/78

The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanadu' Phone: 339.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org